**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.160/2025 இ.ம.எண்.

எம்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர். பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயபிரகாஷ் | மாவட்டம் | : |
| த/பெ.பெயர் | : ராமசாமி | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கின் வாதி. நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டு ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. 28.02.2025 தேதியில் உள்ள இந்திய அரசின் சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன அமைச்சகத்தால் வழங்கப்பட்ட உதயம் பதிவு சான்றிதழ் இணையதள நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 01.11.2021 தேதியில் உள்ள பிரதிவாதி எனது பெயருக்கு எழுதிக்கொடுத்த கடன் உறுதி சீட்டு அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பிரதிவாதி என்னிடம் 25.06.2014 தேதியில் கடனாக பெற்ற ரூ.3,00,000/- த்திற்க்கு உண்டான கணக்கு பட்டியல் உண்மை நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. பிரதிவாதி என்னிடம் 01.04.2020 தேதியில் கடனாக பெற்ற ரூ.3,00,000/- த்திற்க்கு உண்டான கணக்கு பட்டியல் உண்மை நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. பிரதிவாதி என்னிடம் 01.06.2021 தேதியில் கடனாக பெற்ற ரூ.3,00,000/- த்திற்க்கு உண்டான கணக்கு பட்டியல் உண்மை நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. தாவா கடன் தொகைக்கான கணக்குபட்டியல் விபரம் உண்மை நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.6 ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடுசெய்யப்படுகிறது.)

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.